TERM 3

மாதிரி வினாத்தாள் 1 T3

6th Standard

**அறிவியல்**

Reg.No. :

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்

Time : 01:00:00 Hrs | Total Marks : 35

பகுதி-அ | 10 x 1 = 10

1) ஒரு செல் தாவரம்
(a) யூக்ளினா (b) அமீபா (c) கிளாமிடோமோனஸ்

2) மனிதனை எந்த இனத்தில் வகைப்படுத்தலாம்?
(a) பறப்பன இனம் (b) பாலூட்டி இனம் (c) ஊர்வன இனம்

3) முதுகெலும்பு உள்ள விலங்கு எது?
(a) ஜெல்லி மீன் (b) நட்சத்திர மீன் (c) விலாங்கு மீன்

4) கீழ்க்காணும் தாவரங்களில் எது ஒருவித்திலைத் தாவரம்?
(a) மா (b) பலா (c) நெல்

5) கீழ்க்காணும் பண்புகளில் எப்பண்பு இருவித்திலைத் தாவரத்திற்குப் பொருந்தும்?
(a) சல்லி வேர் (b) இணைப் போக்கு நரம்பு (c) ஆணிவேர்

6) மழையின் பிள்ளை நான்; எனக்குப் பச்சையம் இல்லை. அதனால், என் உடல் வெள்ளை நான் ஒரே செல்லாக இருந்தால், நுண் பூஞ்சை (Yeast). பல செல்களாக இருந்தால், பெரும் பூஞ்சை (Mushroom) ! நான் யார்?
(a) காளான் (b) பாசி

7) அசுத்தமான நீர்த்தேக்கம் அற்புதமாய் என்னை வரவேற்கும். மனித உடலே என் வாகனம். அவர்கள் இரத்தமே என் தீவனம். பார்வைக்கு நான் சாதாரணம். பாய்ந்து விட்டால் 'சுருக்' என்று குத்தும் குற்றவாளி. நோய்கள் எனது பங்காளி - நான் யார்?
(a) கொசு (b) ஈ

8) நீரிலும் இருப்பேன்; நிலத்திலும் இருப்பேன்; ஆனால் ஆமை இல்லை. தத்தித் தத்திக் குதிப்பேன்; முயலும் இல்லை. உடலெங்கும் ஈரமிருக்கும்; முதலையும் இல்லை. நான் யார்?
(a) தவளை (b) பாம்பு

9) உடலெங்கும் உள்ளது பச்சையம். உங்கள் ஊரில் ஈரப்பசையிருந்தால் நான் இருப்பது நிச்சயம். நான் யார்?
(a) பாசிகள் (b) பச்சோந்தி

10) நீளமாக இருப்பேன்; ஆனால் கயிறு இல்லை; நெளிந்து செல்வேன்; ஆனால் புழு இல்லை. காதுமில்லை; கால்களும் இல்லை தோலை உரித்து விடுவேன் என்று சொல்லமாட்டேன்; ஆனால் செய்வேன். நான் யார்?
(a) பாம்பு (b) விலாங்குமீன்

பகுதி-ஆ | 10 x 1 = 10

11) பாக்டீரியாவைக் கண்டுபிடித்தவர்------------ (ஆண்டன்வான் லூவான் ஹாக் / அலெக்சாண்டர் ஃபிளமிங்)


12) நகரும் தாவரம்---------(அமீபா / கிளாமிடோமோனஸ்)

13) உழவனின் நண்பன் ----- (வெட்டுக்கிளி / மண்புழு )

14) இது வைரஸால் ஏற்படும் நோய் ------(இளம்பிள்ளைவாதம் / காலரா )

15) சின்னம்மை என்பது --------- ஏற்படுகிறது (வைரஸால் / பூஞ்சையால்)

16)




QB365 QUESTION BANK https://www.qb365.in

17) உங்கள் பள்ளி வளாகத்தில் கீழே காணப்படும் இரண்டு குப்பைத் தொட்டிகளும் வைக்கப்பட்டிருந்தால், நீங்கள் ஒவ்வொரு தொட்டியிலும் சேகரிக்கும் கழிவுகளின் பெயர்களைப் பட்டியலிடவும்

மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள்; ---------------------- ---------------------------

-------------------- -------------------------

-------------------- ------------------------

18) சிமெண்ட் தயாரிப்பில் பயன்படும் அடிப்படையான மூலப்பொருள்கள்_____,______ மற்றும் ______ ஆகும்

19) பி.வி.சி. என்பதன் விரிவாக்கம்_______

20) தீப்பிடிக்காத உடைகள் தயாரிக்க_______ பயன்படுகிறது

பகுதி-இ 7 x 1 = 7

21) யானை, வௌவால், பூனை, மண்புழு.
( முதுகெலும்பை அடிப்படையாகக் கொண்டு...)

22) முதலை, ஆமை, தவளை, மீன்.
( வாழ்விடத்தை அடிப்படையாகக் கொண்டு...)

23) கொசு, ஈ, தேனீ, மூட்டைப்பூச்சி.
(பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு...)

24) அமீபா, யூக்ளினா, ப்ளாஸ்மோடியம், தேள்.
( செல்லை அடிப்படையாகக் கொண்டு...)

25) நாடாப்புழு, கொக்கிப்புழு, மண்புழு, அஸ்காரிஸ்
(பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு...)

26) காசநோய், டிப்தீரியா, காலரா, அம்மை.
(நோய்க் காரதியை அடிப்படையாகக் கொண்டு...)

27) மக்காச்சோளம், கரும்பு, தென்னை, மா
( ஒரு வித்திலை/இரு வித்திலைத் தாவரம் என்ற அடிப்படையில் )

பகுதி-ஈ 5 x 2 = 10

28) நுண்ணுயிரிகளால் ஏற்படும் நன்மைகள், தீமைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

29) விவசாயிகளின் நண்பன் என்று மண்புழுவை ஏன் சொல்கிறோம்?

30) தவளைகள் நீரிலும், நிலத்திலும் வாழ்வதற்காகப் பெற்றுள்ள தகவமைப்புகள் இரண்டினை எழுதுக

31) பூஞ்சைகள் பற்றி நீங்கள் அறிந்ததை எழுதுக

32) இருவித்திலைத் தாவரம், ஒரு வித்திலைத் தாவரம் என எப்படிக் கண்டுபிடிப்பீர்கள்?

பகுதி-உ 3 x 3 = 9

33) விஜி , சுஜி இருவரும் ஆறாம் வகுப்பு மாணவிகள். விஜி தினமும் மதிய உணவை வாழை இலையிலும், சுஜி அலுமினியத் தாளிலும் வைத்து எடுத்து வருவர். இருவரில் யாருடைய செயல் சரியானது. காரணத்தை எழுதவும்

34) பயன்படுத்தித் தூக்கியெறியும் பேனாவைக் காட்டிலும் மீண்டும் மீண்டும் மை நிரப்பிப் பயன்படுத்தும் பேனாவே சிறந்தது. ஏன்?

35) கடற்கரைக்குச் சென்ற மதனும் சுதனும் சாப்பிட பழம் , கடலை, பிஸ்கட் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். சாப்பிட்ட பின் மதன் பிஸ்கட்உறை, பழத்தோல்,கடலைத்தோல் ஆகியவற்றைச் சாப்பிட்ட இடத்திலேயே போட்டு விட்டான். சுதன் அங்கு வைக்கப்பட்டிருந்த குப்பைத்தொட்டியில் போட்டான். இதில் யாருடைய செயல் வரவேற்கத்தக்கது. ஏன்?

*******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in